RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2030

OPEN ACCESS

# திருவாசகத்தில் உறவுநிலை

**அ. தீபா** [அ, *]

[அ] தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு, இந்தியா.

# Relationship in Thiruvasagam

**A. Deepa** [a, *]

[a] Tamil Research Centre, Senthamil College, Madurai–625 001, Tamil Nadu, India

* Corresponding Author: deepaguhan1401@gmail.com

Received: 27-06-2022
Revised: 30-09-2022
Accepted: 12-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

The universe is bound by a law of gravitation, attracted by a binding force, and is moving. The creatures that have arisen within it from time immemorial are also operating because of a bond of love and affection that has developed between them. Even the five-sense animals begin to live together and cherish their families and their offspring. Man is no exception to this. A man with the knowledge of thinking understands his every emotion, maintains and cherishes its relations, and lives in harmony with society. These relations have remained unchanged from time immemorial to the Tamils and continue to this day. From the Sangam literature to modern literature, no other literature has spoken as much about human relations as the bhakti literature. Thus, the purpose of this article is to examine the relationship between God and Manickavasagar in Thiruvasagam.

**Keywords:** Thiruvasagam, Manickavasagar, God, Relationship

## முன்னுரை

தமிழ்ச் சமூகத்தில் சங்ககாலம் முதல் உறவுகளுக்கும், உறவு முறைகளுக்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டு வந்துள்ளது. மனிதர்களுக்கும் - இயற்கைக்கும் இடையே உள்ள உறவு. மனிதனுக்கும் - மனிதனுக்கும் இடையே உள்ள உறவு, மனிதர்களுக்கும் - விலங்குகளுக்கும் இடையே உள்ள உறவு பற்றி எந்த அளவிற்கு இலக்கியங்கள் பேசியதோ அதை விட ஒரு படி மேலாக இறைவனுக்கும் - மனிதனுக்குமிடையே உள்ள உறவு நிலையும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இறைவனுக்கும் - அடியார்களுக்கும் உள்ள உறவுப்பாலமாக பக்தி அமைகின்றது. இறைவன் மீதுள்ள அன்பு முதிரும் போது கடவுளை நெருக்கமாக வைத்து எண்ணுவது மனித இயல்பு. இறைவனைத் தாயாகவும், சேயாகவும், தோழனாகவும், நாயகனாகவும் பாவித்து அடியார்கள் பக்தி செய்வர். சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகரும் இறைவனை இவ்வாறு பல விதங்களில் உறவுமுறை வைத்துத் தம் பாடல்களின் வழியே எவ்வாறு பக்தியை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மாணிக்கவாசகரின் அன்புநெறி

அன்பினால் எலும்புகள் இளக நின்று ஓலமிட்டு, மனம் உருகி நிற்கும் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இறைவன் தோன்றுகின்றான். என் உடல் உறுப்புகள் எல்லாம் கொம்புத் தேன் போல் இன்பமயமாக ஆகிவிட்டன என்பதை

"உளையா அன்பு என்பு உருக, ஓலமிட்டு

அற்றேன் ஆகு, அவயவம் சுவைதரு

கோல்தேன் கொண்டு செய்தனன்

தடக்கையின் நெல்லிக் கனிஎனக்கு ஆயினன்"

என்ற பாடல் வரிகளால் விளக்குகின்றார் (Dhandapani Desigar, 2017).

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்"

என்கிறார் வள்ளுவர் (Karunanithi, 2010).

அண்டங்களை எல்லாம் கடந்து நிற்கும் அற்புதனான இறைவன் அற்பமான நம் உள்ளத்திலே உறைகின்றான். இறைவன் மீது நமக்கு எழும் அன்புணர்வு ஆறாகப் பெருகுகின்றது. அதனால் எலும்புகள் நெகிழ்ந்து உருகுகின்றன. அப்போது கண்களிலே மிகழ்ச்சி பொங்குகிறது. கண்ணீர்த் துளிகள் அரும்புகின்றன. இத்தகு தூய்மையான அன்பை இறைவனிடத்தில் பல விதங்களில் வெளிப்படுத்துகின்றனர். மாணிக்கவாசகருக்கும், இறைவன் சிவபெருமானுக்கும் இடையே உள்ள உறவுநிலைக்கு அடிப்படையாய் அமைவது இந்த அன்பு நெறியே ஆகும்.

## தாய் - சேய் உறவு

உறவு நிலைகளில் மிகவும் சிறந்தது தாய் - சேய் உறவு, பக்தனுக்கு இறைவனைத் தாயே என அழைப்பதில் உண்டாகின்ற பேரின்பம், குழந்தையானது தனது தாயிடத்தில் நெருக்கமான பாசத்துடன் கொஞ்சிக் குலவுவதைப் போல மற்றையோரிடம் குலாவுவதில்லை.

இறைவனை மற்றைய உறவுமுறைகள் சொல்லி அழைப்பதை விடத் தாயாக அழைப்பதில் பெரு மகிழ்ச்சி உண்டாகும்.

மாணிக்கவாசகரும் இறைவனைத் தாயாகவும், தன்னைச் சேயாகவும் நினைத்துப் பல பாடல்கள் பாடியுள்ளார். இறைவனைச் சேயாகவும், தன்னைத் தாயாகவும் வைத்து இரண்டு பாடல்கள் பாடியுள்ளார்.

## இறைவனைத் தாயாக எண்ணுதல்

தாயானவள் குழந்தையிடம் குற்றம் இருப்பின், அதன் நன்மை கருதிக் குழந்தையை விலக்கி வைப்பாள். இறைவன் அத்தாயை விட மேலானவன். ஏனெனில், நம்மிடம் குறையிருப்பினும் ஏற்றுக் கொள்வான்.

"தாயிற் பெரிது தயா உடைய தம்பெருமான்"

என்று இறைவனின் பெருங்கருணையை நினைத்து மாணிக்கவாசகர் போற்றிப் பாடுகின்றார் (Dhandapani Desigar, 2017). இதனையே,

"தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பர்

ஆயவுள்ளத்து, அமுது அருந்தப் பெற்றார்"

என்கிறார் (Subiramaniyan, 2007). மேலும்,

"தாயினும் நல்ல தலைவரென்று அடியார்

தம்மடி போற்றிசைப் பார்கள்"

என்ற ஞானசம்பந்தர் வாக்கினையும் இங்கு ஒப்பு நோக்குதல் பொருந்தும் (Subiramaniyan, 2007).

காலமறிந்து குழந்தையினுடைய பசியைப் போக்குபவள் தாயிலேயே தலை சிறந்வள். இறைவனும் அத்தகைய தாயைப் போன்று காலமறிந்து கொடுக்கும் அன்புடையவன். தன்னை அவ்வாறே காலம் வந்ததும் இறைவன் ஏற்றுக் கொண்டான் என்கிறார். இதனை,

"பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து"

என்கிறார். இதனால் இறைவன் மனித உயிர்களிடத்து காட்டும் பேரருளை வியக்கின்றார் (Dhandapani Desigar, 2017).

சவலைக் குழந்தை தாய்ப்பால் இல்லாது மெலிந்து வருந்தும். அதைப் போலத் தானும் வருந்துவதாகக் கூறுகிறார். இதனை,

"தாயாய் முலையைத் தருவானே

தாரது ஒழிந்தாய் சவலையாய்

நாயேன் கழிந்து போவானே

நம்பி இனிதான் நல் குறியே!

தாயே என்று உன் தாள் பணிந்தேனே"

என்ற பாடலடிகளால் விளக்குகிறார் (Dhandapani Desigar, 2010). இதனால் இறைவன் திருவடியடைந்தும் தம்மை அவனிடத்துச் சேர்த்துக் கொள்ளாததை நினைத்து வருந்தி மீண்டும் ஆட்கொள்ளுமாறு வேண்டுகின்றார்.

பொற்கிண்ணத்தைத் தாயிடம் குழந்தை அதுவாகக் கேட்டுப் பெறாது. தாயாகவே விரும்பிக் கொடுப்பாள். எனவே, அப்பொற்கிண்ணத்தின் அருமை குழந்தைக்குத் தெரியாது. அதே போல, மாணிக்கவாசகர் தானாக இறைவனைத் தேடிப் பெறவில்லை. இறைவனே விரும்பிக் காட்சி கொடுத்ததால், அவனது அருமையை அறியாது இருந்து விட்டதை எண்ணி வருந்துகின்றார்.

"மழக் கைஇலங்கு பொற்கிண்ணம் என்று அலால்,

அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்"

என்று தாயின் அருமை தெரியாத குழந்தைபோல இரங்குகின்றார் மாணிக்கவாசகர் (Dhandapani Desigar, 2017).

உணவு உண்ண மறுக்கும் குழந்தைக்குத் தாய் அது விளையாடப் போகின்ற வழியெல்லாம் நின்று மறைத்து ஊட்டுவாள். அதைப்போல, இறைவனும் தாம் போகின்ற வழிகளில் எல்லாம் நின்று கருணையான அமுதத்தை ஊட்டினான். ஆனால் தான் அதன் அருமையை அறியாமல்,

"வழிநின்று நின்அருள் ஆர் அமுதூட்ட மறுத்தேனே"

என்று கலங்குகின்றார் (Dhandapani Desigar, 2017). மேலும்,

"தாயேயாகி வளர்ந்தனை போற்றி"

என்பதன் மூலம் கருணையை ஊட்டி ஊட்டி வளர்ப்பவன் இறைவன் என்பதை உணர்த்துகின்றார் (Dhandapani Desigar, 2017).

திருமால், அயன், இந்திரன் முதலான தேவர்கள் தவம் புரிவதற்காகக் காட்டில் நின்று உடல் மெலிவர். அத்தவம் தம்மீது புற்று எழும்படியாக அமையும் எனினும் காண்பதற்கு அரிதான இறைவன் மனிதனாகப் பிறந்த நாய் போன்ற தன்னை வலிய வந்து தாயைப் போலப் பேரன்பு செய்தமையால் தம் மேனியெங்கும் மயிர் சிலிர்க்கிறது என்கிறார். இதனை,

"தான் வந்து, நாயே னைத் தாய்போல் தலையளித்திட்டு

ஊன் வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பு எய்து"

என்கிறார் (Dhandapani Desigar, 2017). மேலும்,

“தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்

தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ”

என்று பாடுவதன் மூலம் இறைவன் தனக்கு மட்டும் அல்லாது அனைத்து உயிர்களுக்கும் தாயமானவர் என்பதை உணர்த்துகிறார் (Dhandapani Desigar, 2017).

## அம்மை அப்பனாகப் பாவித்தல்

மாணிக்கவாசகர் இறைவன் தனக்கு அம்மையாகவும், அப்பனாகவும் இருப்பதை,

“அம்மையே அப்பா ஒப்பிலா மணியே

அன்பினில் விளைந்த ஆரமுதே”

எனப் புகழ்கின்றார். அவன் யாருக்கும் ஒப்பு இல்லாதவன் என்கிறார் (Dhandapani Desigar, 2017).

“உன்னை ஒப்பாய் மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே

அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்

என் அரும் பொருளே”

என்பதன் வாயிலாக இறைவனுக்கு நிகரானவன் இறைவன் மட்டுமே என விளக்கி உரைக்கின்றார் (Dhandapani Desigar, 2017).

“தாதாய் மூவேழ் உலக்கும் தாயே”

என்பதால் பழமையான ஏழு உலகங்களுக்கும் தாயாகவும், தந்தையாகவும் இறைவன் இருப்பதை உணர்த்துகின்றார். இறைவனைத் ‘தாயே’, ‘தந்தையே’ என விளிப்பதோடு மட்டுமல்லாமல் தாய்மைக்குரிய பண்புகளை இறைவனிடத்துக் கண்டு மகிழ்கிறார் அடிகளார் (Dhandapani Desigar, 2017).

## இறைவனைச் சேயாகக் காணுதல்

மாணிக்கவாசகர் இறைவனைத் தாயாகவும், தன்னைச் சேயாகவும் கண்டதோடு நிறைவடையாமல், தன்னைத் தாய்ப் பசுவாகவும், இறைவனைக் கன்றுக் குட்டியாகவும் நோக்குகின்றார். தாய்ப்பசுவின் மனநிலையோடு தம் மனத்தைப் பொருத்திப் பார்த்து,

“கற்றா மனமெனக் கதறியும் பதறியும்

மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது." (Dhandapani Desigar, 2017)

என்றும்

“கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே”

என்றும் கதறுகின்றார். கன்றைக் காணாத பசு கதறியும், பதறியும் நிற்கும். தன் கன்றைத் தவிர மற்றோர் கன்றின் மீது அன்பு காட்டாது. கன்று இறந்து விட்டால், பசுவிடமிருந்து பால் கறக்க அக்கன்றின் தோல் உருவில் வைக்கோலைத் திணித்து உயிருள்ளது போலத் தாய்ப்பசுவிடம் நிற்க வைப்பர். ஆறறிவில்லாத பசு தன் உயிரற்ற கன்றினைப் பார்த்துப் பாலைச் சுரக்கும். அத்தகு மென்மையான பண்புடையது தாய்ப்பசு (Dhandapani Desigar, 2017).

அதைப்போன்றே தானும் கன்றினைக் காணாத தாயாகத் தவிப்பதாகவும், தன் சிவ பெருமானைத் தவிர வேறு எத்தெய்வத்தையும் நினைக்காமல் இருப்பதாகவும் கூறுகின்றார். இதன் மூலம் மாணிக்கவாசகருக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள தாய்-சேய் உறவு நிலையை அறிய இயலும்.

## நாயகன் - நாயகி உறவுநிலை

ஒத்த அன்புடைய இருவரது காதல் வாழ்க்கையைக் குறிக்கும் அகம். இது களவு, கற்பு என இருவகைப்படும். இதற்கு வாழ்வியலை உள்ளடக்கியது அகத்திணை மரபு.

“காமப் பகுதி கடவுளும் வரையார்

ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்”

என்பது தொல்காப்பியம் (Ilampooranar, 2008). கடவுள் மீது தெய்வப் பெண்களும், மானுடப் பெண்களும் காதல் கொள்வர் எனப்து பொதுப் பொருள். அடியார்கள் இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் எண்ணிப் பல பாடலகள் பாடியுள்ளனர். இதுவே நாயகன் - நாயகி பாவம் [Bridal Mysticism] எனப்படுகின்றது. தலைவனிடத்தில் தலைவி கொண்ட காதல் இறைவனிடம் அடியார் கொண்ட அன்பாக மாறுகிறது.

காதலர் ஒருவரை ஒருவர் நாடுதல், மணம் செய்ய உறுதி கொள்ளல், மணம் செய்து கொள்ளுதல், ஊடலால் பிரிதல், மீண்டும் கூடுதல், என்பவை காதலின் பல்வேறு படிநிலைகளாகும். இறைவனிடமும் இத்தகு நிலைகளில் அன்பு கொள்வதை ஆண்டாள் பாடல்களில் காணலாம். உள்ளத்து உணர்ச்சிகளால் காதல் உணர்வை வெளிப்படுத்தியும், அரற்றியும், ஆற்றியும் தம் பாடல்களில் பதிவு செய்தமை கேட்போரை ஈர்க்கும் தன்மையுடையவை.

இந்நாயகன் நாயகி பாவத்தையே ‘மதுர பாவம்’ என்பர். மேற்கண்ட மதுரபாவத்தைக் கடைப்பிடித்து மாணிக்கவாசகர் இறைவனை அடைய விழைகின்றனர்.

## காதலனாகப் பாவித்தல்

மாணிக்கவாசகர் இறைவனை ஆத்ம நாதனாகவும், தன்னை நாயகியாகவும் பாவித்துப் பாடுகின்றார்.

‘ஆத்ம நாதனை நீ வரக் கூவாய்’

என்கிறது குயிற்பத்து, திருவாசகம் முழுவதிலும் ‘காதலன்’ என்ற சொல்லை இறைவனைக் குறிக்கவே பயன்படுத்தியுள்ளார் (Dhandapani Desigar, 2017).

சான்றாக,

"தூயமேனிச் சுடர்விடு சோதி

காதல னாகிக் கழுநீர் மாலை"

"பேரமைத் தோளி காதலன் வாழ்க"

முதலிய வரிகளைச் சுட்டலாம். மேலும், இறைவன் மீதான தன் அன்பையும் காதலாகவே வெளிப்படுத்துகிறார் (Dhandapani Desigar, 2017).

"காத லாலுனை யோத நீவந்து

காட்டி னாய்கழுக் குன்றிலே”

"காலமுண்டாகவே காதல்செய்

துய்மின்”

என்ற பாடல் வரிகளின் மூலம் இறைவனைக் காதலன் என்றதும் அவனை அடையக் காத்து நிற்கும் காதலியே தான் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார் (Dhandapani Desigar, 2017).

## காதலியாகப் பாவித்தல்

மாணிக்கவாசகர் தலைவி நிலையில் இருந்து அன்னைப் பத்து, கோத்தும்பி, குயில்பத்து, தசாங்கம், ஆசைப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து ஆகிய பதிகங்களைப் பாடியுள்ளார். தலைவனைப் பிரிந்த தலைவி கிளி முதலானவற்றைத் தலைவனிடம் தூது அனுப்புவாள். அவனைக் காண ஆசைப்படுபவள் தான் அவனோடு இருந்ததை எண்ணி உள்ளம் மகிழ்வாள். அவனில்லாத வாழ்வை விரும்ப மாட்டாள். தோழியிடம் தன் நிலையைத் தெரியப்படுத்தித் தாயிடம் அறத்தொடு நிற்க விழைவாள். மாணிக்கவாசகர் தன்னை நாயகியாக நினைத்துச் சொல்லிய காதல் நிகழ்வுகளைத் தான் அனுபவித்து இறைவனை அடைய விழைகின்றார்.

## தூது அனுப்புதல்

காதல் கொண்ட பெண் தலைவனைக் காணும் பொருட்டுப் பறவைகள், அஃறிணைப் பொருட்கள் முதலானவற்றைத் தூது அனுப்புவது ஓர் அகமரபு. அவ்வாறு தூது அனுப்பும் பொருளைச் சிறப்பித்துப் பாடுவதும், அத்தூதுப் பொருளுக்குப் பரிசளிப்பதாகப் பாடுவதும் தூது இலக்கணமாகும்.

"கற்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ

திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?

மருப்பொசிந்த மாதவன்தன் வாய்ச்சுவையும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"

என்று தம் நாயகனின் வாய்ச்சுவையை அறிய, ஆண்டாள் நாச்சியார் சங்கினைத் தூதாக அனுப்புகிறாள். இவ்வாறே மாணிக்கவாசகரும் கோத்தும்பி, குயில், கிளி ஆகிய பறவை இனங்களைத் தூதாக அனுப்புகிறார் (Dhandapani Desigar, 2017).

## கோத்தும்பி

தும்பி என்பது வண்டு. "கரும்பு, தேனி, நிமிறு, தும்பி என்ற நான்கு வகையான தேனீக்களில் ஒன்று. இந்நான்கு வகையுள் வண்டும், தேனும், நறுநாற்றத்தில் செல்வன், ஏனைய இரண்டும் எல்லா மணத்திற்குள்ளும் செல்வன்" (Dhandapani Desigar, 2017).

கோத்தும்பி என்பது வாசனை நாடிச்செல்லும் அரச வண்டாகும். அதனை இறைவனிடம் தூதாக அனுப்புகிறார் மாணிக்கவாசகர்.

தம் உள்ளத்தையே தும்பியாக உருவகம் செய்து அங்கும் இங்கும் அலையாமல் இறைவனின் திருவடித்தாமரை மலரினையே குறிக்கோளாகக் கொண்டு அடிகள் பாடுகிறார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்

"சே ஏறு சேவடிக்கே"

"தேன் ஆர் கமலமே"

"பொன் அம் கழலுக்கே"

"செய்யார் மலரடிக்கே"

"தெள்ளும் கழலுக்கு"

சென்றூதாய்க் கோத்தும்பி என்கிறார் (Dhandapani Desigar, 2017). அவரது நோக்கம் சிவனோடு கலத்தலாகும். மாணிக்கவாசகர் தன் நிலையைத் தலைவனிடம் சென்று, "சொல்லி வா" என்று கூறாமல், தும்பியை 'ஊதி வா' என்கிறார். தும்பி சென்று ஊதும் பொழுது அதனது நறுமணத்தாலும் பிறவற்றாலும் அத்தும்பி தன்னிடத்திலிருந்து தான் வருகிறது என்பதனைத் தலைவனாகிய இறைவன்

உணர்ந்து தன்னை நாடி வருவான் என்று தலைவி எண்ணியதே இதற்குக் காரணமாகும். இவ்வாறு தலைவியிடத்திலிருந்து வரும் பொருளின் மணத்தை வைத்துத்தலைவன் தலைவியை நினைத்தனை,

"மெய்பொதி வாசம் மண்பொறி காட்டி"

என்ற சிலப்பதிகார வரிகள் மூலம் அறியலாம் (Venkadasami nattaar, 2011).

## முடிவுரை

மாணிக்கவாசகரின் பக்தி நெறி எனும் இவ்ஆய்வுக் கட்டுரையில் கீழ்க்கண்ட முடிபுகள் பெறப்பட்டன. மாணிக்கவாசகருக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவுநிலைகள் உணரப்பட்டன. இறைவனைத் தாயாக வைத்து மாணிக்கவாசகர் சிறப்பிக்கின்றார். தாய் சேய் உறவு மிகச்சிறந்த உறவாகக் கருதப்படுகின்றது. தன்னைத் தாய்ப்பசுவாகவும், இறைவனைக் கன்றுக்குட்டியாகவும் நினைத்துப் பாடல்கள்பாடியுள்ளார். அக மரபுகளோடு பொருந்தும் வகையில் தூது அனுப்புதல், அறத்துடன் நிற்றல், தலைவனைக் கூட விழைதல் முதலான களவொழுக்கங்களை நாயகி நிலையில் இருந்து பாடியுள்ளார். திருவாசகம் முழுமைக்கும் நாயகன், நாயகி உறவுநிலையே மேலோங்கிக் காணப்படுகிறது.

## References

Dhandapani Desigar, S. (2010) Thiruvaasaga peroli, Naam Thamizhar Publication, Chennai, India.

Dhandapani Desigar, S. (2017) Thiruvaasagam moolamum uraiyum, Saradha Publications, Chennai, India.

Ilampooranar, (2008) Tholkappiyam, Saradha Publications, Chennai, India.

Karunanithi, M. (2010) Thirukkural kalagnar Urai, Thirumagal publications, Chennai, India.

Subiramaniyan, S.V. (2007) Tholkappiyam, Manivasagar Publications, Chennai, India.

Venkadasami nattaar, N.M. (2011) kowra publications/ Sarafha Publications, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License